RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1019

OPEN ACCESS

# இலக்கிய வடு: மெரினா துப்பாக்கிச் சூடு

செ. வீரபாண்டியன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தர்மமூர்த்தி ராவ் பகதூர் காலவள கண்ணன் செட்டி இந்து கல்லூரி, பட்டாபிராம், சென்னை-600072, தமிழ்நாடு, இந்தியா.

# Literary Scar: The Marina Shooting

S. Veerapandiyan [a, *]

[a] Department of Tamil, Dharmamurthi Rao Bahadur Calavala Cunnan Chetty Hindu College, Pattabiram, Chennai-600072, Tamil Nadu, India.

* Corresponding Author: vvraa.s@gmail.com

Received: 11-09-2021
Revised: 03-06-2022
Accepted: 12-06-2022
Published: 12-08-2022

Check for updates

## ABSTRACT

Histories tend to be forgotten or blurred over time. Even if society fails to preserve them, literature is a treasure trove of records. Finding them and reclaiming history becomes part of justice for the people of a region. In that way, this review presents the incident of firing on fishermen during the process of renovating the Marina beach in Chennai. It also shows the various stages of development since the start of the refinement project. The situation in which the fishermen lose their livelihood due to the scheme and the struggle raised by the fishermen is analysed in detail. The police's excessive power and various losses, such as the deaths of fishermen, are restored here. As there is no literary contribution to this event in any other literature, the main sources in this article are the literary records of Palamalai and Inkulab (revolution) poems. This study reveals the effects of the fishermen on the plan to rehabilitate the marina beach and the poetry as a socio-historical document.

**Keywords:** Marina Beach, Rehabilitation Project, Government Restrictions, Fishermen's Struggle, Police Attack

## முன்னுரை

இலக்கியம் உயிர்ப்பின் இன்னொரு பரிமாணமாக இயங்குகிறது. வரலாற்றின் அசைவுநிலைகளைப் படியெடுத்திடும் முதன்மை ஆவணமாக விளங்கி வருகிறது. நூற்றாண்டுகள் கடந்தும் சில துயர நிகழ்வுகளைச் சமூகம் மறந்தாலும் அவற்றை, அவற்றிலும் அடித்தள மக்களின் வரலாற்றை இலக்கியங்கள் ஆறாத வடுக்களாக அடையாளம் காட்டிக் கொண்டு இருக்கின்றன. பெரிய விவகாரங்களையும் ஓரிரு சொற்களில் அழுத்தமான பதிவுகளாகக் கொண்டு மீளாத வரலாறுகளை மீள்நினைவுகளாகத் தக்க வைத்துள்ளன. அந்நிரலில் மீனவச் சமூகத்தின் மீது நடத்தப்பட்டதொரு துப்பாக்கிச் சூட்டினைக் (04.12.1985) கவிதை இலக்கியம் காட்சிப்படுத்திக் காலங்கடந்தும் தமிழ்ச் சமூக வரலாற்றிற்கு ஆதாரமாக இருப்பதை இக்கட்டுரை கவனப்படுத்துகிறது.

## சீர்படுத்தும் திட்டம்

இருபதாம் நூற்றாண்டில், வங்காள விரிகுடாவின் கரைப்பகுதியான சென்னை மெரினா கடற்கரையைச் சீர்படுத்தும் திட்டங்கள்000066 1960களில் தொடங்கப்பட்டன. 1965இல் காங்கிரசு ஆட்சியில் கடற்கரையைச் சீர்படுத்துவதற்கான சோதனை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு மரம்

வளர்ப்புக்காகச் செடிகள் நடப்பட்டன, நடைபாதைகள் போடப்பட்டன, புல்தரைகள் அமைக்கப்பட்டன. இவ்வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே ஆட்சி மாறியது. 1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது சி. என். அண்ணாதுரை பூம்புகார் நகரத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் மெரினாவை உருவாக்கத் திட்டமிட்டார். ஆனால் அவர் மரணமடைந்து 1970இல் அவரது நினைவகம் மெரினாவில் கட்டப்பட்ட பிறகு நினைவகத்தின் சுற்றுப் பகுதிகள் மட்டுமே அழகுபடுத்தப்பட்டன. மீண்டும் 1973இல் 1.5 கோடி மதிப்பிலும், 1983இல் கடற்கரையின் முன்பகுதிகளை அழகுபடுத்தவும் தமிழக அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டது. ஆனால் நடக்கவில்லை. 1983இல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இரண்டாண்டுகளில் தடைபட்டது. மீனவர்களின் கட்டுமரங்கள், படகுகள் உள்ளிட்டவற்றை அப்புறப்படுத்திவிட்டுக் கடற்கரையை அழகுசெய்யும் திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடப்பட்டது. அதன் பத்தாண்டுகளுக்கு முன்பு தில்லியில் நெருக்கடி நிலைக் காலத்தில் சஞ்சய் காந்தியாலும், பிறகு இராஜீவ்காந்தியாலும், அதேபோன்று பம்பாயிலும் இவ்வகைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதை ‘எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி’ இதழ் காட்டுகின்றது.

## கட்டுப்பாடும் கலவரமும்

உலக வங்கியின் துணையோடு மேற்கொள்ளப்பட்ட அழகுபடுத்தும் திட்டத் தீர்மானத்திற்காக, 1985 நவம்பர் 4 அன்று மெரினா கடற்கரையில் மீனவர்களின் கட்டுமரங்களையும் மீன்பிடி கருவிகளையும் அரசு கைப்பற்றியது. இதனால் அயோத்தியா குப்பம், நடுக்குப்பம், மாட்டான்குப்பம், நொச்சிக்குப்பம் என மீன்பிடி தொழிலை நம்பியிருக்கும் சுமார் 10 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வாழ்வியல் தொழிலையிழந்து திண்டாடின. இதனை ஊடகங்கள் கவனப்படுத்த, உச்சநீதிமன்றம் அவற்றைத் திரும்ப ஒப்படைக்கும்படி தமிழக அரசாங்கத்திற்கு அறிவுறுத்தியது. நிறைய முரண்பாடுகள் நிகழ்ந்து வந்தன. மீன்பிடிக்க வேண்டிய பகுதிகளை அரசாங்கமே தீர்மானிப்பது முதலிய சில கட்டுப்பாடுகள் ஏற்கும்படியாக இல்லை. இதுபோன்ற முரண்பாடுகளும் மோதல்களும், மீனவர்களுக்கும் காவல்துறைக்கும் இடையே அவ்வப்போது நடந்தேறின. இவை டிசம்பர் 4ஆம் நாளன்று பெரிய கலவரமாக மாறின. அன்று காலை கடலினருகே நிறுத்தப்பட்டிருந்த கட்டுமரங்களைக் காவல்துறை அப்புறப்படுத்தும் செயலில் ஈடுபட்டது. மீன்கள் ஏலம் விடப்படுமிடத்தில் ஏலத்தைக் கலைத்து, இவ்விடத்தில் வணிகம் எதுவும் செய்யக்கூடாது எனத் தடுத்துத் தாக்கவும் செய்தது (Nedumaran, P., 1.9.2018, Informer, Advocate, Ayodhya Kuppam, Chennai).). இதனால் இருதரப்புக்கும் வாக்குவாதம் அதிகப்பட்டு, மீனவர்களில் சிலர் தாக்கப்பட்டனர். கட்டுமரங்கள் சில உடைக்கப்பட்டன. இவற்றால் உண்டான பதற்றம் மோதலுக்கு வழிவகுத்தது.

மீனவர்கள் கடற்கரையிலிருந்த கட்டுமரங்களைக் கொண்டுவந்து சாலையில் கிடத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். செய்தியறிந்து குடியிருப்புப் பகுதியிலிருந்த மீனவர் சமூகத்து மக்கள் சாலைக்கு வந்து ஒன்றுபட்டனர். அனைவரும் நீதிகோரித் தலைமைச் செயலகத்தை நோக்கிப் பேரணி நடத்தத் தொடங்கியதைக் காவல்துறை கலைக்க முற்பட்டது. மோதல் பெரிதாகவே மீனவர் தரப்பிலிருந்து கற்கள் வீசப்பட்டன. காவல்துறை தடியடி, கண்ணீர்ப்புகைத் தாக்குதலோடு, துப்பாக்கிச்சூட்டை நிகழ்த்தியது. விவேகானந்தர் இல்லத்தினருகேயும் மாட்டான்குப்பத்தினருகேயும் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் பலியாகினர் (Nedumaran, P., 1.9.2018, Informer, Advocate, Ayodhya Kuppam, Chennai). பலர் குண்டடியில் படுகாயமடைந்தனர். துப்பாக்கிப் பதற்றத்தால் மீனவர்கள் தப்பித்து ஓடினர். எனவே, வசிப்பிடங்களிலிருந்த பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் தாக்குதலில் சிக்கிக்கொண்டனர். தலைக்கவசம் அணிந்துவந்த காவல்துறையால் துப்பாக்கிக்கட்டை, கைத்தடிகளால் குடியிருப்புகளுக்குள் தாக்குதல் நடத்தப்பட்டது.

படகுகளை அகற்றியபோது பாதிக்கப்பட்ட மூன்று மீனவர் பகுதிகளில் நடுக்குப்பமும் அயோத்தியா குப்பமும் இத்தாக்குலில் பெரும்பாதிப்படைந்தன. நடுக்குப்பம் 740 வசிப்பிடங்களையும் 1654 குடும்பங்களையும் கொண்டிருந்தது. இங்குள்ள மக்கள் மீன்பிடிப்பைத் தாண்டிக் கூலி வேலைகளுக்கும் செல்பவர்களாக இருந்தனர். பாதிப்படைந்த, தாக்கப்பட்ட பெண்களில் 70 வயதளவிலான 5 பெண்களும் அடங்குவர் என்பவற்றை ‘எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி’ இதழ்

தெரிவிக்கின்றது. சிறுவர்களும் தாக்கப்பட்டுள்ளனர். இதில் 14 வயதுச் சிறுவனை மயிலாப்பூர் காவல்நிலையத்திற்குக் கொண்டுசென்று, வழக்கு பதிவுசெய்திட ஏதுவாக 18 வயதாகிவிட்டதாக ஒத்துக்கொள்ளச் சொல்லித் துன்புறுத்தப்பட்டிருக்கின்றான். டிசம்பர் 14 வரை அச்சிறுவன் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளான். காவலர்களால் மேலும் மளிகைக் கடை, கோழிக்கடையுடன் மீன்களும் காய்கறிகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. வீடுகள் சிதைக்கப்பட்டு வாழ்வாதாரப் பொருட்களான தையல் இயந்திரம், தள்ளுவண்டிகள் ஆகியவையும் சிதைக்கப்பட்டுள்ளன.

தெருமுனை ஒன்றில் பெரிய நெருப்பை ஏற்படுத்தி மீன்பிடி வலைகள், மிதிவண்டிகள், மளிகைப் பொருட்கள், ஆடுகள் முதலியவற்றை அதில் எரித்துள்ளனர். தீயிடப்பட்டதில் ஒரு தெருவிலுள்ள 13 குடிசைகள் எரிந்துள்ளன. இவ்வாறாகக் காவல்துறை வன்முறையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டுள்ளது. இவையனைத்தும் நடுக்குப்பம் பகுதிக்குள் சுமார் 9 மணிக்கு மேல் 12 மணிக்குள் நடந்தேறின. இரண்டொரு நாளில் பலியான இருவரையும் சேர்த்து மொத்தம் இவ்வன்முறையில் மீனவ மக்கள் 6 பேர் பலியானதை அறிய முடிகின்றது. அயோத்தியா குப்பத்தில் 4.12.1986இல் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னத்தில் (இன்றும் உள்ளது) அன்னம்மாள், கோதண்டபானி, மனோகரன், துலுக்கானம், சேகர், குள்ள சேகர், சின்னப்பிள்ளை எனும் 7 பேர் பெயர் பதிவாகியுள்ளது (களஆய்வில் கண்டது). ஏராளமானோர் குண்டடி மற்றும் பிற காயங்களுக்கு ஆளாகினர். துப்பாக்கிச் சூட்டளவுக்கு நிலைமை மோசமடையவே அப்போதைய அரசு, மெரினாவை அழகுபடுத்தும் திட்டத்துக்கான தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இனி மீனவர்கள் பாதிப்படையும் செயல்பாடுகள் நிகழாது என அறிவித்தது.

## இலக்கியப் பதிவுகள்

இருபதாம் நூற்றாண்டில் கடற்கரையோர மக்களுக்கு ஒரு மீளாத் துன்பத்தினை உண்டாக்கிவிட்ட இந்நிகழ்வுக்குத் தமிழ்க் கவிதைகள் எதிர்வினை ஆற்றியிருக்கின்றன. அவை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதை வன்மையாக எதிர்க்கின்றன. மீனவர்களின் துயர நிலையை முன்வைத்துப் பழமலய் கவிதையில்,

புயலடிக்கும் காலத்திலும் போய்வருவ மீன்புடிக்க!

தெசமாறிப் புயலடித்தால் பொணம்கூடக் கெடைக்காது!

ஒங்கமீனத் தின்னவந்தாங்க - ஓ மீனவரே!

சென்னையிலே ஒங்களச் சுட்டாங்க!

எனும் அடிகள் மீனவ மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றன (Palamalay, 2009). “துப்பாக்கிச்சூடு நடத்திய காவல்துறை அதிகாரிக்கு எதிரான கண்டன வரிகளை”, “அல்சேஷன் நாயும் கொம்புச் சுறாவும்” என்ற தலைப்பில் ஒரு தனிக்கவிதையில் இன்குலாப்,

எத்தனை தோட்டாக்களால்

வாய்களை அடைப்பாய்?

அலைகளைச் சுடுவாய்?

எந்தத் தடியால்

நுரைகளை அடிப்பாய்?

என்று கொதிப்படைந்த கேள்விகளால் பதிவுசெய்திருக்கின்றார் (Inquilab, 2005). மேலும் அவர் ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் இந்திய வீரர்கள் பரிசுபெற “சில உருப்படியான யோசனைகள்” என்று,

“சுடுற போட்டியில

ஒவ்வொரு வருஷமும்

முதல் பரிசு வாங்குற
அதிகாரி ஐயாவை
துப்பாக்கிப் போட்டிக்கு
அனுப்பிச்சிருந்தா
தங்கமெடலா வாங்கித்
தன்மானம் காத்திருப்போம்.
ஆனாலும் ஒண்ணு
குறிதப்பாமச் சுடுறதுக்கு முன்னே
மனுசரைச் சுட்டாத்தான்
ஊக்கம் பொறக்கும்"

எனும் அடிகளை எள்ளல் தன்மையுடன் எழுதியிருக்கின்றார் (Inquilab, 2005). இவ்வாய்வுக்காக வாசிக்கப்பட்ட, நன்கு அடையாளம்கண்ட தமிழ்க் கவிஞர்கள் 35 பேரில் இந்த இரண்டு கவிஞர்கள்தான் இந்த வரலாற்று நிகழ்வினைத் தமது கவிதைப் படைப்புக்குள் பதிவுசெய்துள்ளனர். அதாவது,

அனுபவமைய நோக்கில், கவிதை வாழ்க்கை அனுபவங்களை உண்மையாகச் சொல்வது. அதுதான் முக்கியமானது. கவிஞன் புதிய ஆழமான அனுபவங்களைப் படிப்பவனுக்கு உருவாக்கித் தரமுயல்கிறான். வாசகன் அந்த அனுவங்களை ஏற்கும்போது ஒரு விழிப்புணர்ச்சியையும் உலகினைப் பற்றிய புரிந்துகொள்ளலையும் அடைகிறான். இதனைப் பொய் என்று சொல்வது தவறு. எந்த நல்ல கவிதையும் நமது அனுபவங்களை அகலப்படுத்துகிறது, ஆழப்படுத்துகிறது, விரிவுபடுத்துகிறது (Poornachandran, 2013).

என்பதைப்போன்று, இங்கே இவ்வாறு கவிதைப் பதிவுகள் மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டைக் கண்டிக்கின்றன. அம்மக்கள் பெரும்பாதிப்படைந்த இந்நிகழ்வின் சில நாள்களில் சென்னையிலுள்ள இந்திய சனநாயக மாதர் சங்கம் ஓய்வுபெற்ற நீதிபதி வி. ஆர். கிருஷ்ணையர் தலைமையில் உண்மையறியும் குழுவொன்றை நிகழ்விடத்திற்கு அனுப்பியது. வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் பங்குபெற்ற இக்குழு உண்மையறிந்து அதற்குரிய நிவாரணத்தை அரசு வழங்கிட வழிவகுத்தது.

தமிழ்நாடு முழுக்கக் கண்டனம் தெரிவிக்கப்பட்ட இந்நிகழ்வானது, குடிமக்களை மதிக்காத அதிகாரப் போக்கினையே காட்டுகின்றது. ஒரே நேரத்தில் அழகுபடுத்துதலும் அதில் இன்னொரு தரப்பு பாதிக்கப்படுதலும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வையும், இந்த அழகுபடுத்துதலென்பது சமூகத்தின் வறுமையை மறைத்து, வளர்ச்சியடைந்த ஒன்றாகக் காட்டிக்கொள்ள முயல்வதையும் வெளிப்படுத்துவதாகப் பார்க்கப்படுகின்றது. எதுவாயினும் இது காலத்திற்கும் மாறாத வடுவாய் இன்றுவரை மீனவச் சமூகத்தில் நினைவுகொள்ளப்படுகின்றது. அதன் சாட்சியமாய் அயோத்தியா குப்பத்தின் நினைவுச் சின்னம் விளங்குகின்றது.

## முடிவுரை

இலக்கியம் மனித மன வெளிப்பாடு, ஒரு சமூகத்தின் பண்பாடு உள்ளிட்டவற்றை மட்டுமல்லாது வரலாற்றையும் பாதுகாக்கும் ஆவணமாகத் திகழ்கிறது. வரலாறுகளுக்குரிய பதிவுகளே கிடைக்காத, இல்லாத நிலைகளிலும் சங்க இலக்கியம் போன்று இலக்கியங்கள் எக்கால வரலாற்றையும் அடையாளங்காண வலுவான தடம் அமைக்கின்றது. இத்தகு தன்மையினையே இவ்வாய்வுக் கட்டுரை இங்கு எடுத்தியம்பியது. இதுபோன்றதொரு வரலாற்றுப் பெட்டகத்தைக் கொண்டாடவும் அதனை வளர்த்தெடுக்கவும் தமிழ்ச் சமூகம் மட்டுமல்லாது மண்ணெங்குமுள்ள மனித

சமூகம் கடமையாற்ற வேண்டும். மனித வாழ்வியலுக்குப் படைப்பாளர்களும் இக்கட்டுரை காட்டுவது போன்றதொரு பங்களிப்பைச் செய்திட வேண்டுமென்பதையும் இவ்வாய்வு எதிர்நோக்குகின்றது.

## References


Inquilab, (2005) Ovvoru Pullaiyum, Ponni veliyeedu, Chennai, India.

Palamalay, (2009) Pazhamalai Kavidhaigal, Kavya veliyeedu, Chennai, India.

Poornachandran, K., (2013) kavithaieyal vasippum ilakkanam, Adaiyalam Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License